# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:62** **தேதி:-31.08.2015**

## PLIகமிட்டி கூட்டமும் இதர மத்திய சங்க செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

**PLI கமிட்டி கூட்டம்:-** 31.08.2015 அன்று PLI கமிட்டி கூட்டம் நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு ஆர்களும், NFTE தலைவர் தோழர் இஸ்லாம் அஹமது அவர்களும் கலந்துக் கொண்டனர். துவக்கத்திலேயே ஊழியர் தரப்பு தலைவர்கள், PLI பார்முலா உருவாக்குவது கால தாமதம் ஆகும் என்றால் ஊழியர்களுக்கு தற்காலிக PLI வழங்க வேண்டும் என கோரினார்கள். இன்றைய கூட்டத்திற்கான அறிவிப்பில், "PERFORMANCE MANAGEMENT முறை அடிப்படையில் PLI" எனக் குறிப்பிடப்பட்டிருந்ததற்கு ஊழியர் தரப்பு தனது எதிர்ப்பை தெரிவித்தது. அது சரி செய்ய ஏற்றுக் கொள்ளப்பட்டது. இறுதி செய்யப்படும் PLI பார்முலா ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் என நிர்வாக தரப்பு தெரிவித்தது. நிறுவனம் லாபத்தை ஈட்டா விட்டாலும், PLI வழங்கப்பட வேண்டுமா என்ற கேள்விக்கு DOT இதுவரை பதில் தரவில்லை என நிர்வாக தரப்பில் தெரிவிக்கப் பட்டது. இதனை கடுமையாக எதிர்த்த ஊழியர் தரப்பு, இது தொடர்பான DPE வழிகாட்டுதலை கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்தினர். PLI வழங்கப்படுவதற்காக அடைய வேண்டிய இலக்குகள் தொடர்பான விவாதத்தில், அதிகமாக உள்ள அளவீடுகளை குறைக்க வேண்டும் என தெரிவித்தனர். இது தொடர்பாக விவாதிக்க ஒரு வார காலத்திற்குள் CFA அதிகரிகளுடன் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்வதாக முடிவு செய்யப்பட்டது. PLI பார்முலா விரைவில் இறுதி செய்வதற்கு வசதியாக தொடர்ச்சியான கூட்டங்களை அடிக்கடி கூட்டப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்க பொது செயலாளர் கேட்டுக் கொண்டார். அத்துடன் BSNL ஊழியர் சங்கத்தின் பிரதிநிதியாக தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி நியமிக்கப்பட்டுள்ளதாக இந்த கமிட்டியின் தலைவரிடம் அவர் தெரிவித்தார். BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் விடுப்பில் செல்ல இருப்பதால், கூட்டம் நடைபெறுவது பாதிக்கப்படக்கூடாது என்பதாலேயே இந்த ஏற்பாடு. கமிட்டியின் தலைவர் இதனை ஏற்றுக் கொண்டார். இந்தக் கூட்டத்திற்கான விவாத பதிவுகளை வழங்க வேண்டும் என ஊழியர் தரப்பு கேட்டுக் கொண்டதையும், தலைவர் ஏற்றுக் கொண்டார்.

**7ஆவது ஊதியக் குழு:-** 26.08.2015 அன்று நடந்த மத்திய மந்திரிசபைக் கூட்டம் ஏழாவது ஊதிய குழுவுக்கு நான்கு மாத கால நீட்டிப்பை வழங்கியுள்ளது. முன்னதாக ஊதிய குழுவின் தலைவர் 2015 ஆகஸ்டு இறுதிக்குள் 7-ஆவது ஊதிய குழுவின் அறிக்கையை சமர்ப்பிப்பதாக அறிவித்திருந்தார். தற்போது 2015 டிசம்பர் 31 வரை கால நீட்டிப்பு வழங்கப் பட்டிருக்கிறது.

**GPF அட்வான்ஸை WITH DRAWAL ஆக மாற்றுவது:-** ERP அமலாக்கத்திற்கு பிறகு GPF அட்வான்ஸை Final Withdrawal ஆக மாற்றுவதில் பல சிக்கல்கள் இருப்பதாக பல மாநிலங்கள் மத்திய சங்கத்திற்கு தெரிவித்திருந்தன. ERP திட்டத்தில் தேவையான வசதிகள் இல்லாததால் Final Withdrawalஆக மாற்றுவதை ஏற்றுக்கொள்வதில்லை. BSNLEU சங்கம் ஏற்கனவே இரு முறை இது குறித்து GM (ERP) அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளது. எனினும் பிரச்சனை இன்னும் தீர்ந்த பாடில்லை. மீண்டும் ஒரு முறை பொதுச்செயலர் தோழர் P.அபிமன்யு

அவர்கள் காசியாபாத்தில் இருந்த திரு. ராமன் அகர்வால், GM (ERP), அவர்களுடன் பேசியுள்ளார். HCL. நிறுவனத்தின் ஒருங்கிணப்போடு இந்த பிரச்சினை தீர்ப்பதில் முன்னேற்றம் உள்ளது என்றும் அக்டோபர் மத்தியில்தான் இது தீர்க்கப்படும் எனவும் GM (ERP), தெரிவித்துள்ளார். விரைவில் தீர்த்து வைக்க பொதுச்செயலர் வலியுறுத்தியுள்ளார்.

**வோடஃபோன் நிறுவனம் நாட்டின் தொலைதொடர்பு அமைச்சரின் அதிகாரத்துக்கு சவால் விடுகிறது:-** தொலைதொடர்பு அமைச்சர் தனியார் நிறுவனங்களின் மோசமான சேவைத்தரத்தைப் பற்றி அடிக்கடி விமர்சிக்கிறார் குறிப்பாக அழைப்புகள் நழுவுவது குறித்து. பாராளுமன்றத்திலும் இது பற்றி அறிக்கை விட்டார். DOTயும் சேவைத்தரத்தை உயர்த்த பல முயற்சிகள் மேற்கொண்டது, அமைச்சர் மற்றும் DOTயின் தொடர்ச்சியான இந்த கருத்துக்கள் தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களை எரிச்சலடைய செய்துள்ளது. இது வோடஃபோன் நிறுவனத்தின் தலைமை அதிகாரியான சுனில் சூட், அமைச்சரின் அதிகாரத்துக்கு சவால் விட செய்துள்ளது. அழைப்புகள் நழுவுவது குறித்த அமைச்சர் மற்றும் DOT யின் பார்வை இந்திய அரசின் பார்வை அல்ல என சுனில் சூட் தெரிவித்துள்ளார்

இந்த சூழலில் அழைப்புக்கள் டிராப் ஆவது குறித்து திரு.நரேந்திர மோடி அவர்கள் பெரும் கவலை தெரிவித்திருப்பதாக பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இதுவும் அரசாங்கத்தின் பார்வை அல்ல என சொல்வாரா?

**ஜனாதிபத்திய உத்தரவு:-** ஊழியர்களுக்கு ஜனாதிபத்திய உத்தரவு வழங்க வேண்டி நிலுவையிலுள்ள பிரச்சனைகள் 31-8-2015 பிறகு பரிசீலிக்கப்படமாட்டாது என கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் வெளியிட்டுள்ளது. மாவட்ட, மாநில நிர்வாகங்க்களின் செயலற்ற தன்மைக்காக தகுதியான ஊழியர்கள் தண்டிக்கப்படக்கூடாது என்பது மத்திய சங்கத்தின் பார்வை. எனவே தனது நிலையை மறு பரிசீலனை செய்ய வேண்டி BSNLEU கார்ப்பரேட் அலுவலகத்துக்கு கடிதம் எழுதியுள்ளது.

**JAO காலிப்பணியிடங்கள்:-**31-07-15 தேதியில் JAO பதவிகளுக்கான காலியிடங்களை தெரிவிக்குமாறு கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் எழுதியுள்ளது.

**தேசிய கவுன்சிலுக்கு கூடுதல் பிரச்சனைகள்:-** BSNL ஊழியர் சங்கம் 33 வது தேசிய கவுன்சிலுக்கு கீழ்கண்ட கூடுதல் பிரச்சனைகளை கொடுத்துள்ளது.

(1). Sr.TOA(G), TTA and Telecom Mechanic ஆகிய கேடர்களில் பணி புரிவோர் விதி 8ன் படி மாற்றலில் செல்ல உள்ள தடைகளை நீக்க வேண்டும். இந்த கேடரில் மாற்றலில் செல்ல உள்ள மாவட்டங்களில் அங்கு பதவி உயர்வுக்காக காத்திருக்கும் ஊழியர்களின் பதவி உயர்வு மாற்றலில் செல்பவர்களால் பாதிக்கப்படும் என்பதால் மாற்றல் வழங்கப்படவில்லை. இப்போது சூழல் முற்றிலும் மாறிவிட்டது. அந்த பாதிப்பு என்பது தற்போது இல்லை. தடையுத்தரவின் தேவை முற்றிலும் நிறைவேறிவிட்டதாலும், மாற்றல் கிடைக்காத ஊழியர்கள் சொல்லொணா துன்பத்தை சந்திப்பதாலும் அந்த தடையை நீக்க வேண்டும்

(2) கடந்த ஊதிய மாற்றத்தின் போது பல அலவன்ஸுகள் மாற்றப்படவில்லை. எதிர்காலத்தில் அவை பரிசீலிக்கப்படும் என உறுதி அளைக்கப்பட்டது. நிர்வாகத்துடன் பல முறை இப்பிரச்சனை எழுப்பப்பட்டும் இது வரை அலவன்ஸுகள் மாற்றப்படவில்லை. எனவே இவை விரைவில் மாற்றப்படவேண்டும் என கோரப்படுகிறது

(3) தேசிய கவுன்ஸில் மற்றும் தேசிய கவுன்ஸிலின் நிலைக்குழுவில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அமல் படுத்தப்படவேண்டும். 10-2-15 மற்றும் 12-3-15 தேதிகளில் நடைபெற்ற 21

வது தேசிய கவுன்சிலின் நிலைக்குழுவின் அறிக்கை பாரா 2.13ன் படி “ ஊழியர் தரப்பால் NEPP சம்பந்தமாக எழுப்பப்பட்ட அனைத்து பிரச்சனைகளையும் ஒரு கமிட்டி பரிசீலித்து அதன் அறிக்கை அடுத்த 2 அல்லது 3 மாதங்களுக்குள் சமர்பிக்கப்படும். அப்படி ஒரு கமிட்டி அறிக்கையை சமர்ப்பித்ததா? அதன் உள்ளடக்கம் என்ன? என்பது தெரியவில்லை. என்வே எழுப்பப் பட்ட அனைத்து பிரச்சனைகளையும் உடனடியாக தீர்த்து வைக்க ஊழியர் தரப்பு கோருகிறது

(4) தேசிய கவுன்சில் முடிவுபடி TTA, TM, STOA RM ஆகிய கேடர்களின் பெயர்களை மாற்றும் பணி ஒரு கமிட்டிக்கு வழங்கப்பட்டு அவைகளுக்கு புதிய பெயர் மாற்றம் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன. NON EXECUTIVE ஊழியர்களில் விடுபட்ட அனைத்து கேடர்களின் பெயர் மாற்றத்தையும் இறுதிப்படுத்த கேடர் பெயர் மாற்ற கமிட்டிக்கு உடனடியாக அனுப்ப வேண்டும்.

**BSNL நிறுவனத்தோடு மாநிலத்திற்குள் ரோமிங் வசதிக்காக தவிக்கும் தனியார் நிறுவனங்கள்**:- சமீபத்தில் ஏர்டெல் நிறுவனம் மாநிலத்திற்குள் ரோமிங் வசதிக்காக CMD BSNLக்கு கடிதம் எழுதியிருப்பதாக மும்பை பங்குச் சந்தையில் தெரிவித்துள்ளது. முன்பு எழுதியிருந்த ஒரு கடிதத்தில் ”மாநிலங்களுக்குள் ரோமிங் ஏற்பாட்டிற்கு விருப்பம் தெரிவித்திருந்தது. அதில் சம வாய்ப்புக்கான நம்பிக்கையையும் தெரிவித்திருந்தது. ஏர்டெல்லுடனான இந்த ஏற்பாட்டிற்குள் BSNL நுழைந்தால் BSNL டவர் சரியாக கிடைக்காத இடங்களில் ஏர்டெல் நிறுவன டவர்கள் நமது வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும். இது வருவாய் பகிர்வு என்ற முறையில் செய்யப்படும். ஏர்டெல், வோடஃபோன் ஆகிய நிறுவனங்களை சில மாதங்களுக்கு முன்பு BSNL அணுகிய போது அந்த நிறுவனங்கள் ஆர்வம் காட்டவில்லை. தற்போது ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தோடு BSNL ஒரு ஏற்பாட்டை செய்து விடலாம் என்ற அச்சம் வந்ததும் ஏர்டெல் தற்போது இந்த ஏற்பாட்டிற்கு வந்துள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**